**Crl.M.P.No.871/2025**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026**

**சாட்சி –1**

**பெயர் – பிரகாஷ்ராஜ் (27) த/பெ. பலராமன், கோட்டப்பூண்டி**

1. கடந்த 2023ம் வருடம் ஒரு நாள் மாலை சுமார் 04.00 மணியளவில் சிந்திப்பட்டு கிராமத்திற்கு செல்லும் வழியில் சரவணன், ரேனுகா, மதன்குமார், ரஞ்சித்குமார், முருகன், மஞ்சுளா மற்றும் அடையாளம் தெரியாத 4 நபர்கள் அருளானந்தம் மற்றும் தேன்மொழி ஆகியோர்களை அடித்துவிட்டனர். மேலும், அவர்களை மிரட்டிவிட்டு சென்றனர். அருளானந்தம் என்பவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. தேன்மொழி என்பவருக்கு உடம்பில் காயம் ஏற்பட்டது. காயமடைந்த அவர்கள் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டனர். சம்பவத்தை பார்த்த நான் அவலூர்பேட்டை காவல் நிலையத்தில் மேற்குறிப்பிட்ட நபர்கள் மீது புகார் அளித்தேன். இச்சம்பவத்தில் மேற்குறிப்பிட்ட அனைவரும் தான் ஈடுபட்டிருந்தனர். எனவே நான் புகார் அளித்த அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/– B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.